பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 01 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** பிஜேபி தலைவர் பதவிக்கான தேர்தல் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

**3)** ஆவின் பால் விற்பனை அதிகரித்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

**4)** வடகிழக்கு பருவமழை அடுத்த இரு தினங்களில் விலக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** அர்மீனியா சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் **Aaryan Varshney** பட்டம் வென்றார்.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<>>>>>>

புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற தேசிய புத்தொழில் தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர உரையாற்றினார்.

**2014-**ஆம் ஆண்டில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை **500-**க்கும் குறைவாக இருந்ததாக அவர் கூறினார்.

தற்போது இது இரண்டு லட்சத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

இதில் மகளிரின் பங்களிப்பு அதிகரித்துள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தித் துறையிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இளையோரிடையே புத்தொழில் ஆர்வம் அதிகரித்துள்ளதற்கு மத்திய அரசின் நடவடிக்கைகளே காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

புத்தொழில் நிறுவனங்கள் பல்வேறு துறைகளுக்கு புதிய வாய்ப்புகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

புத்தொழில் இந்தியா இயக்கம் புரட்சியாக உருவெடுத்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் புத்தொழில் நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த நிறுவனங்கள் மூலம் 21 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

தேசிய கல்விக்கொள்கையில் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புவனேஷ்வரில் ஒடிஷா கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

சர்வதேச தரத்திற்கு இணையான கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த கொள்கை கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆசியர்களுக்கு உரிய பயிற்சி வழங்குவதற்கும் இந்த கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளதாக திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<<>>>>>>

பிஜேபி தலைவர் பதவிக்கான தேர்தல் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 19-ஆம் தேதி நடைபெறும் என்றும், அன்றைய தினமே மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்றும் பிஜேபியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியின் மாநாடு நடைபெறவுள்ள மதுராந்தகத்தில் அதற்கான ஏற்பாடுகள் குறித்து மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று பார்வையிட்டார்.

பிஜேபி நிர்வாகிகளோடு இணைந்து இப்பணிகளை பார்வையிட்டதாக சமூக வலைதளத்தில அவர் பதிவிட்டுள்ளார்.

வரும் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநாட்டு பணிகளை பார்வையிடுவது தொடர்பான புகைப்படங்களையும் டாக்டர் எல். முருகன் பகிர்ந்துள்ளார்.

<<<<<>>>>>>

சட்ட விரோதமாக இணையதளங்களில் வாக்கி-டாக்கிகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, 13 நிறுவனங்களுக்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தில் ஆவின் பால் விற்பனை அதிகரித்துள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆவின் மூலம் நாள்தோறும் 35 லட்சம் முதல் 38 லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படுவதாக தெரிவித்தார்.

பால் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்தொகை டிசம்பர் மாதம் வரை வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வரும் ஜூன் மாதம் வரை ஊக்கத்தொகை வழங்குவதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் திரு மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

கறிக்கோழி பண்ணை விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட

விவசாய பாதுகாப்பு சங்க நிர்வாகிகளை திமுக அரசு கைது செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கறிக்கோழி பண்ணை விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 45 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மின்கட்டணத்தை திமுக அரசு உயர்த்தியுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன்பின்னரும் கூட, மின் வாரியம் நஷ்டத்தில் இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தனியாரிடமிருந்து கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதே இதற்கு காரணம் என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இதற்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதிக்கக் கூடாது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் மாட்டுப்பொங்கல் வழக்கமான உற்சாகத்துடன் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, மாநிலம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மதுரை மாவட்டம் பாலமேட்டில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் ஆயிரம் காளைகளும், 600 மாடுபிடி வீர்களும் பங்கேற்றனர்.

இதில், மாடுபிடி வீரர்கள் பத்து பேர் உட்பட 30 பேர் காயமடைந்தனர்.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடுபிடி வீரருக்கு முதல் பரிசாக கார் வழங்கப்பட உள்ளது.

நாகை மாவட்டம் கோடியக்கரையில் மாட்டுப் பொங்கலையொட்டி மீன் விற்பனை அதிகரித்ததாகவும், இதனால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 55 Sec. )***

<<<<<>>>>>>

வடகிழக்கு பருவமழை அடுத்த இரு தினங்களில் விலக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் 30 Sec. )***

<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் அரசு மருத்துவமனைகளில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் தமிழர்களின் வீர விளையாட்டான இளவட்ட கல் தூக்கும் போட்டி இன்று நடைபெற்றது.

-------------

வேலூரில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

-------------------

தமிழகம் முழுவதும் இருசக்கர வாகனங்களை திருடியது தொடர்பாக 98 வழக்குகளில் தொடர்புடைய நபரை நாகையில் பொதுமக்கள் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

-----------------

திண்டுக்கல் மாவட்டம் தும்பலப்பட்டியில் விஷ தேனீக்கள் தாக்கியதில் 4 சிறுவர்கள் உட்பட 9 பேர் காயமடைந்தனர்.

---------------

திருவாரூர் மாவட்டத்தில் மாட்டுப்பொங்கலை முன்னிட்டு மாடுகள் வீதி உலா இன்று நடைபெற்றது.

--------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் விற்பனை செய்தது தொடர்பாக ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அர்மீனியாவில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் **Aaryan Varshney** பட்டம் வென்றார்.

இதன்மூலம், இந்தியாவின் **92-**ஆவது கிராண்ட் மாஸ்டராக அவர் உருவெடுத்துள்ளார்.

-------------------

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் — ராம்குமார் ராமநாதன் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 7-6** என்ற செட் கணக்கில், நெதர்லாந்தின் **Niels Visker — Max Houkes** இணையை வென்றது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியாவின் பிரஜ்வல் தேவ் — நிதின்குமார் சின்ஹா இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

-------------

தோஹாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மணிக்கா பத்ரா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>>**